1975 அக்டோபர் 31]

சென்னை நகரில் சுரங்க இரயில் பாதை.

* 152 **வினா—திரு. என். கிட்டப்பா :** } மாண்புமிகு மக்கள்
திரு. என். கே. பழனிசாமி :

நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சுரங்க இரயில் பாதை அமைக்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். சென்னை மாநகரத்திற்குள் தற்போதுள்ள போக்குவரத்து நிலைமை ஏற்கனவே நெரிசல் மிகுந்ததாக உள்ளது. வருங்காலத்தில் இம்மா நகராட்சியின் வளர்ச்சி அதை மேலும் கடுமையாக ஆக்கிவிடும். பெருகிவரும் போக்குவரத்தையும் பெருநகர்ப் பகுதிப் போக்கு வரத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும்பொருட்டு பெருநகர்ப் பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்த அடங்கல் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகவே மணலியுடன் திருவான்மியூரை இணைத்து, வடக்கு-தெற்கு தொடர்பு வழி நெடுக, மிகவும் விரைவுப் போக்கு வரத்துக்கான நீளமான அமைப்பை ஏற்படுத்துவதற்கான அவசியம் பற்றிக் குறிப்பிட்டு 1991-ஆம் ஆண்டுக்கான வருங்கால போக்குவரத்துத் தேவைக்கு வழி செய்வது குறித்த அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சுரங்க ரயில் பாதை மதிப்பீட்டு தொகை எவ்வளவு என்றும், இந்த வேலை எந்த ஆண்டிலே துவங்கப்பட இருக்கிறது—குறிப்பாக அதிலே எத்தனை புகை வண்டி நிலையங்கள் எந்தெந்தப் பகுதி களிலே அமைக்கப்படும்—என்றும் விவரங்களை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்து இன்னும் ஒரு 15 ஆண்டுகளிலே எவ்வளவாக இருக்க நேரிடும் என்று "கம்ப்யூடைரைசேஷன்" செய்வதன் மூலம் எவ்வளவு மக்கள், எந்தெந்த இடங்களிலே இருந்து சென்று வர நேரிடும் என்ற புள்ளிவிவரங்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே டிராபிக் பாயின்ட்கள்

[1975 அக்டோபர் 31

எந்தெந்த இடங்களில், எவ்வளவு பேர் ஏறி இறங்குவார்கள், போக்குவரத்து எப்படி இருக்க நேரிடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இரயில்வேத் துறையின் மூலம் இதற்கென்று ஒரு ஆய்வு நடைபெற்று இது தேவையில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டாலும், இப்போது இது தேவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதற்கு மேலே போக்குவரத்துப் பாதை எங்கே அமைக்க வேண்டும் என்பதற்கும், அது எந்தெந்த வழியாக அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் ஒரு வரைப்படம் தயாரிக்கப்பட்டது. இதில் இரண்டு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, சற்று மாறுபட்ட நிலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு கருத்துக்களும் மத்திய அரசிற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இவையெல்லாம் பரிசிலனையில் இருந்து கொண்டு இருக்கின்றன. இரயில்வே இலாகாவிலும் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குப் பின்னல்தான் இதுபற்றி முடிவு ஏற்படுகிற நிலைமை ஏற்படும் என்று கருதுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவாவர்களே, இதேமாதிரியான சுரங்க இரயில் பாதை கல்கத்தாவிற்கு சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையிலே பார்த்தேன். அது எந்த அளவிற்கு உண்மை. அதுபோல இங்கேயும் வழங்க மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவாவர்களே, அண்மையில் மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிட்டி—புற நகர் திட்டக் குழு—ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது சம்பந்தமாக மிகத் தெளிவான திட்டவட்டமான கருத்துக்களை மத்திய அரசினிடத்திலே எடுத்துக் காட்டி வலியுறுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கல்கத்தாவிற்கு சுரங்கப்பாதை எற்கனவே கொடுத்து விட்டார்கள், டில்லிக்கு ஏற்கெனவே ஆரம்பித்து விட்டார்கள், பம்பாய்க்கு ஏற்கெனவே ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நடைபெறுகிற காரியங்கள் நமக்குத் தெரியும். வடக்கே

1975 அக்டோபர் 31]

கொடுத்து விட்டார்கள், தெற்கே கொடுக்கவில்லை என்ற எண்ணம் வரக்கூடாது. மக்கள் தொகை அடிப்படையில்தான் மூன்றாவது நகராக வருகின்ற நமக்கு அடுத்து அளிக்க கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது, இன் பிரின்சிபில் மோர் ஆர் லெஸ் அக்ரீட்.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவரவர்களே, திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரையில் சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கு ஆய்வுகள் சில நாட்களுக்கு முன்னாலே நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைக்கு சுரங்கப் பாதை அமைப்பதிலே நிரம்பச் செலவாகும் என்ற காரணத்தினால் பக்கிங்காம் கால்வாய் கரை ஓரத்தில் இரயில் பாதை அமைக்கலாம் என்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாற்று யோசனையாக "ஆல்டெர்னேடிவ்" சஜஷன் ஆக இதை வைத்தோம். இந்த இரண்டும் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு செலவாகும், எவ்வளவு காலத்தில் நிறைவேற்ற முடியும், நிறைவேற்றுகிற நேரத்தில் என்ன இடையூறுகள் ஏற்படும் என்று இவைகளெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அவர்கள் இவைகளைப் பரிசீலனை செய்து, நமக்கு அனுகூலமாகப் பரிசீலித்து, முடிவு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக அண்ணா சாலையில் சுரங்கப்பாதை அமைக்க ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாக நம்முடைய அரசு அறிவித்தது. அது எந்த அளவிற்குச் செயல் முறையில் இருக்கிறது, செயல் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அண்ணா சாலையின் இரு மருங்கிலும் சுரங்கப் பாதை கட்டப்படலாம் என்பது கருத்தளவில் இடம் பெற்றது. செயல் முறையில், திட்ட அளவில் இடம் பெற்ற கருத்தல்ல. அதற்கு என்று ஏராளமான நிதி

தேவைப்படுகிறது என்பது முக்கிய காரணமாகும். அதைச் சுரங்கப் பாதையாக அமைக்கலாமா அல்லது மேம்பாலமாக அமைக்கலாமா என்ற கருத்து ஆராயப்பட்டது. அதற்கிடையிலே, இப்போது இருக்கிற சில அமைப்பு முறைகளையே மாற்றி, பாதைகளை மாற்றி "ஆல்டெர்னேடிவ் ரூட்ஸ்" ஆக வேறு வழிப்பாதையாக அமைக்க வாய்ப்பு இருக்கிறதா, அப்படி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பது ஆராயப்பட்டது. இப்படிப்பட்ட நிலையிலே தான் சுரங்க இரயில் பாதை, சுரங்கப் பாதை ஆகிய திட்டங்கள் பரிசிலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிய ஆய்வுகள்—பரிசீலனை—முடிந்த பிறகு, எது சாத்தியமோ அது நிறைவேற்றப்படும்.

கொளுஞ்சிப்பட்டியில் புதிய ஏரி

*153. வினா—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தைச் சார்ந்த கரிகாலி ஊராட்சியிலுள்ள கொளுஞ்சிப்பட்டியில் புதியதாக ஏரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

சிவாயம் குளம்

* 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளம் புதுப்பிக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வேலை நடைபெற்று வருகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த சிவாயம் குளத்திற்கு நிலம் கையாகப்படுத்தப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா? இல்லை என்றால் விரைவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?